
## திராவிடத்தால் வாழ்கிறோம்

876

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

16

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# மீண்டும் படைக்கப்பட முடியாத ‘பராசக்தி’

‘பராசக்தி’ திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியும், அதில் கலைஞர் முன்வைத்த விமர்சனங்களும் தீர்வுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால இலக்குகள், ‘காட்சி ஆவணம்’ என்பதை இப்போதும் புரிந்து கொள்ள முடியும். ஆனால், படத்தின் கதையமைப்பும், காட்சியமைப்புகளும் அரசியல் பிரச்சார தொனி தெரியாத வகையில், மக்களின் உணர்வுகளோடு பிணைக்கப் பட்டதாக இருந்தது.

ரங்கோனில் இருக்கும்போது, சந்திரசேகரன் தனது தம்பிகளிடம் சர் பிட்டி தியாகராயர் படத்தைக் காட்டி, “சீரழிந்து கிடந்த நமது குடும்பத்தைத் தூக்கி நிறுத்திய மாமா இப்போது இல்லையே” என்று சொல்வார்.

இதேபோல மற்றொரு காட்சியில் மாணிக்கம் பிள்ளை மற்றும் கல்யாணியின் கணவன் வேணு உரையாடும் காட்சியில் தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால் (நீதிக்கட்சித் தலைவர்) ‘பன்னீர்செல்வம்’ என்றும் பெண் குழந்தை பிறந்தால் (பெரியார் மனைவி) ‘நாகம்மை’ என்றும் பெயர் சூட்ட உள்ளதாக வேணு சொல்கிறான்.

எதார்த்தமான இந்தக் காட்சிகளில், திராவிட இயக்கத் தலைவர்களை, மக்கள் மறந்துவிடாமலிருக்க மீண்டும் நினைவூட்டியிருப்பார். அன்றைக்கு மக்கள் அதை இயல்பாக உள்வாங்கிக் கொண்டனர். இப்போது பார்க்கும் இளந்தலைமுறையினர்கூட, கதையோடும், கூர்மையான வசனங்களுடனும் ஒன்றிணைந்து விடுவார்கள் என்பதனால்தான், ‘பராசக்தி’ காலத்துக்கும் அழியாத காவியமாக நிற்கிறது.

### நீ பிக்பாக்கெட் தானே?

அன்றைய மதராஸில் உடைமைகளை எல்லாம் இழந்த குணசேகரன், பலரிடம் உதவி கேட்டும் கிடைக்காமல் நொந்து களைத்துப்போய் நடைபாதையில் உறங்குகிறான். இரவில் அங்கு ரோந்து வரும் போலீஸ்காரர் குணசேகரனை உசுப்பி கேள்வி கேட்பார்.

**போலீஸ்காரர்:** ஏய் என்ன முழிக்கிறே?

**குணசேகரன்:** தூங்குனவனை எழுப்பினால், முழிக்காமல் என்ன பண்றது?

**போலீஸ்:** இந்த எடத்துல ஏன்டா படுத்தேன்னா?

**குணசேகரன்:** இந்த எடத்துல கூட படுக்கக் கூடாதா?

**போலீஸ் :** நீ பிக்பாக்கெட் தானே?

**குணசேகரன்:** இல்ல... எம்ப்டி பாக்கெட்

என பாக்கெட்டை உதறிக் காட்டும் காட்சி இன்றைய தலைமுறையை ஈர்க்கும் டிரெண்டிங் காட்சி (Trending Material) என்று சொல்ல முடியும்.

அந்தக் காட்சியில், “குதிரைக்குப் பதிலாக, நரம்பு தெறிக்க வண்டி இழுக்கிறான் நாலுகால் பிராணியாக்கப்பட்ட மனிதன்” என குணசேகரன் சொல்வதும், அதற்கு காவலர் “சர்தான் போடா, மெட்ராசுக்கு நீ மேயரா வர்ற காலத்துல மிருகத்த எல்லாம் மனுசனாக்கலாம்” என பதில் அளிப்பதுமாக எழுதி இருப்பார்.



காலம்தான் விசித்திரமானது என்பதை மெய்யாக்கும் வகையில், அந்த வசனத்தை உண்மையாக்கிக் காட்டினார் கலைஞர். தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர் அமர்ந்த போது, மனிதனை அமரவைத்து மனிதன் இழுக்கும் மிருகத் தனத்தை ஒழித்துக் கட்டினார்.

விளிம்புநிலை மக்களின் துன்பங்களைத் திரையில் அவரால் மிகச் சரியாக வெளிப் படுத்த முடிந்தது மட்டுமல்லாமல், பிறகு அதிகாரம் தன் கையில் கிடைத்தபோது திரைப்படத்திற்காக, தான் எழுதிய வசனங்களை நடைமுறைப்படுத்தி (பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்சா ஒழித்து சைக்கிள் ரிக்சா வழங்கும் திட்டம், கண்ணொளித் திட்டம்) என எளிய மக்களின் துயர் துடைக்கும் சட்ட திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தவும் செய்தார்.

அவருக்கு முன்புவரை, இப்படிப்பட்ட காட்சிகளைத் தமிழ்த் திரையுலகம் காட்டியதில்லை. இதுபோன்ற சட்ட திட்டங்களை தமிழ்நாட்டு அரசியல் உலகும் கண்டதில்லை!

‘பராசக்தி’ திரைப்படம் சமூகம் மேல்-கீழ் என இரண்டு கூறாகப் பிரிந்து நின்று மோதிக்கொள்வதை, ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களைக் கொண்டே மிக அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டும். அந்த வேறுபாட்டை தன் உரையாடல்களால் தர்க்கங்கள் கொண்டதாக நிகழ்த்தியிருப்பார் கலைஞர்.

வாழ வழியற்றவர்களான ஏழை எளிய விளிம்பு நிலை மக்களையும், அவர்களை வாழவிடாமல் செய்யும் ‘கள்ள மார்க்கெட் வியாபாரி’ நாராயணப்பிள்ளை, கோயில் பூசாரி, ‘மைனர்’ வேலு போன்ற ஏய்த்துப் பிழைக்கும் எத்தர்களையும் காட்டி இவர்களுக்கிடையிலான மோதலைத் தடுத்து நிறுத்தி ஏழைகளைக் காப்பாற்ற வேண்டிய அரசும் சட்டமும் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்வதையும் விமர்சிக்கும் வகையில் தனது வசனங்களால் விளாசியிருப்பார்

### ‘உலகப் பேரழகி கிளியோபாட்ரா’

“உலகப் பேரழகி கிளியோபாட்ரா, தமிழ்நாட்டு முத்துக்களைச் சாராயத்தில் போட்டுக் குடித்தாளாம். அந்தத் தமிழகத்தின் பெண்களோ ரங்கோனுக்கும் சிங்கப்பூருக்கும் சம்பாதிக்கச் சென்ற ஆடவர்கள் அனுப்பும் பணத்திற்காகக் காத்துப் பட்டினி கிடக்கிறார்கள்.

ஆலயங்கள் இங்கே... ஆண்டவனுக்கு வைரக்குல்லாய், தங்கக்கவசம், ரத்தின சிம்மாசனம். அந்த ஆண்டவனின் அருமைக் குழந்தைகளோ அரை வயித்துக் கஞ்சிக்கு அவதிப்படுகிறார்கள்.”

> 1952-இல் இருந்து இன்று வரையிலான 73 ஆண்டுகளில் ‘பராசக்தி’க்கு நிகரான ஒரு படத்தை, தமிழ்த் திரையுலகம் மீண்டும் படைக்கவும் இல்லை, யாரும் பார்க்கவும் இல்லை!

### கேள்விப்படுகிறோம் நண்பர்களே..

பசிக்கொடுமையால் பல தாய்மார்கள் குழந்தைகளை விற்று விட்டார்களாம். தாயார் குழந்தையை விற்கிறார். பத்து மாதம் சுமந்து படாதபாடுபட்ட தாய், பாலூட்டி சீராட்டி வளர்த்த தாய், தொட்டிலிலே போட்டு ஆராரோ பாடிய தாய், வெள்ளிக் கிண்ணியிலே பால் சோறு போட்டு தாழ்வாரத்திலே தவழ்ந்தோடும் பிள்ளைக்கு ஊட்ட வேண்டும் என்று கனவு கண்ட தாய். மஞ்சள் நீராட்டி, மகனின் மழலைமொழி கேட்டுப் பள்ளிக்குச் செல்லடா கண்மணி என்று அனுப்பி வைத்து, அவன் பின்னழகைக் காண வேண்டும் எனத் துடித்துக் கிடந்த தாய். மகனுக்குத் திருமணம் செய்து மகனும் மருமகளும் மஞ்சத்துக்குச் செல்லும் அந்த நாள் வாராதோ என்று ஏங்கியிருந்த தாய். தான் பெற்ற குழந்தையை தன் வயிற்றிலே கிடந்த வைரத்தை, வைடூரியத்தை, கோமேதகத்தை, தங்கத் தாம்பாளத்தை விலை கூறுகிறாள், பிள்ளையோ பிள்ளையென்று! மார்க்கெட்டிலே கீரையோ கீரை என்று கூவுவது போல!





படங்கள் உதவி : ஞானம்

குழந்தைக்கும் தாய்க்கும் உணவு கிடைக்காத காரணத்தால் குழந்தையைக் கொலை செய்துவிட்டு, தானும் சாகப்போகும்போது பிடிபட்டு கோர்ட்டிலே, குற்றவாளிக் கூண்டிலே! மரண தண்டனைக்காகக் காத்திருக்கிறாள் கல்யாணி என்ற பெண்!” ...என்று உணர்ச்சி பொங்க குணசேகரன் நீதிமன்றத்தில் செய்யும் வாதம் அன்றைய ஆட்சியாளர்களுக்கு எத்தகைய கோபத்தை ஏற்படுத்தியிருக்கும்.

### பிச்சைக்காரர்களும் மாளிகைவாசியாக...

இறுதியில் குடும்பம் ஒன்று சேர்ந்த பிறகு பிச்சைக்காரராக இருந்த ஞானசேகரன் வீட்டைவிட்டுப் புறப்படுகிறான். அப்போது அண்ணன் சந்திரசேகரன் ‘நீ எங்கே தம்பி போறே?’ எனக் கேட்பார். “நான் பரதேசி மடம், ஆலமரத்தடின்னு பழகிட்டேன். நமக்கு அதுதான் சரி” என்பார் ஞானசேகரன்.

**குணசேகரன் :** அப்ப நாங்களும் அங்க வர்றோம்.

**விமலா :** எல்லாரும் பரதேசி மடத்துக்குப் போறதைவிட, பரதேசிகளை எல்லாம் இங்கேயே வரவழைக்கிறது நல்லதாச்சே!

**சந்திரசேகரன்:** அதான் சரி. பரதேசிகள் எல்லாம் பங்களாவாசியா மாறணும். ஞானசேகரா உன் கொள்கைப்படி பங்களாவாசி பரதேசியா மாறக்கூடாது என கூறிவிட்டுக் கிளம்புவார். இறுதியில், அனாதை விடுதி திறப்பு விழாவில் தந்தை பெரியார், ராஜாஜி, அறிஞர் அண்ணா, காமராஜர், ம.பொ.சி., கலைஞர், நாவலர், அன்பழகன் அனைவரும் கலந்து கொள்ள படம் முடிவடையும். 1952-இல் இருந்து இன்று வரையிலான 73 ஆண்டுகளில் ‘பராசக்தி’க்கு நிகரான ஒரு படத்தை, தமிழ்த் திரையுலகம் மீண்டும் படைக்கவும் இல்லை, யாரும் பார்க்கவும் இல்லை!

...காட்சி விரியும்

## கூனிக்குறுகும் அடிமை அ.தி.மு.க.!

கீழடி நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் சற்று முந்தையது என்ற வரலாற்றுப் பெருமிதத்தை தமிழர்கள் அடைந்திருக்கும் வேளையில், அந்த ஆய்வறிக்கையை ஏற்க மறுத்து, முரண்டு பிடிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. கீழடியில் எடுக்கப்பட்ட 18 கரிமப் பொருட்கள் ஃப்ளோரிடாவில் உள்ள பீட்டா அனலிடிகள் லேபரட்டரிக்கும், 5 கரிமப் பொருட்கள் டெல்லியில் உள்ள இன்டர் யுனிவர்சிட்டிக்கும், எலும்பு மாதிரிகள் டெக்கான் கல்லூரிக்கும் அனுப்பப்பட்டு, அறிவியல்பூர்வமாக ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆனால், அதை ஏற்க மறுக்கிறது பா.ஜ.க. என்றால், ஆய்வு முடிவுகளின் மீது அவர்களுக்குச் சந்தேகம் இல்லை. மாறாக, ஆய்வு முடிவுகளை ஏற்கிற மனம் அவர்களுக்கு இல்லை என்றுதான் பொருள்.

ஆரிய சிந்தனைகளைக் கொள்கைகளாகக் கொண்ட பா.ஜ.க. இப்படி அஞ்சுகிறது என்றால், அண்ணாவின் பெயரைத் தாங்கி நிற்கும் அ.தி.மு.க.-வும் அதே தொனியில் பேசுவது தமிழர்களுக்குச் செய்யும் பெருந்துரோகம். அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதே கீழடி நாகரிகத்தை ‘பாரத நாகரிகம்’ எனப் பேசியவர் முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன். தற்போதும் மீண்டும் தனது திருவாயைத் திறந்திருக்கும் மாஃபா பாண்டியராஜன், “ஆரிய நாகரிகம்- திராவிட நாகரிகம் வேறு வேறு என்ற தத்துவத்தைச் சொல்லி பிரிவினைவாதம் செய்யப் பார்க்கிறது தி.மு.க. அரசு” என்று ஆய்வு முடிவுகளுக்கு, முழு முரணான கருத்துகளைச் சொல்லியிருக்கிறார். “பிராந்திய உணர்வுகளைத் தூண்ட முயற்சிக்கின்றனர்” என ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பூசி மொழுகியதைத்தான், நேரடியாக பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிறார் மாஃபா பாண்டியராஜன்.

மேலும், ‘தமிழர் பண்பாடும் பாரதப் பண்பாடும் ஒன்றுதான்’ என மீண்டும் கூறியிருக்கிறார். இக்கருத்துகளைக் கேட்கும் தமிழர்கள், ‘அடிமை சாசனத்தை அ.தி.மு.க.-வுக்கு எழுதிக் கொடுத்ததுடன் எடப்பாடி அண்ட் கோ ஒட்டுமொத்த தமிழர்களின் வரலாற்றையும் அழிக்கப் பார்க்கிறது’ என்றுதான் கருதுவார்கள். தமிழர்களின் தொன்மை நாகரிகத்தைப் ஒன்றிய அரசு அப்படியே ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு போராடும்! வெல்லும்! அப்போது அடிமை அ.தி.மு.க. கூனிக் குறுகி நிற்கும்!

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைக் கண்டு இணைந்த தந்தை!



ஜா.சையது அபுதாகிர்

தஞ்சைக் கழக முன்னோடி அண்ணன் சி.நா.மீ.உபயதுல்லா அவர்களின் உதவியாளராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார் என் தந்தை ஆட்டோ பாபுஜி (எ) ஜாபர் சாதிக். திராவிடர் கழக ஈடுபாட்டுடன் செயல்பட்டு வந்த அவரை, அண்ணன் உபயதுல்லா அவர்கள், ‘கழகத்தில் இணைந்து செயல்படு’ என அறிவுறுத்தி வந்துள்ளார். அதையடுத்து, அவர் ஒருமுறை சென்னை சென்றபோது எனது அப்பாவையும் அழைத்துச் சென்று தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் அவர்களின் வாழ்த்தைப் பெற்று கழகத்தில் இணைத்தார். அப்பாவின் வழியில், கழக உணர்வுடன் இன்று நானும் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

**– ஜா.சையது அபுதாகிர், இளைஞர் அணி துணை அமைப்பாளர், தஞ்சை கோட்டைப் பகுதி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### சிறையில் அடைக்கப்பட்ட பெரியார்!

சென்னை மாகாணத்தில் பள்ளிகளில் அமல்படுத்தப்பட்ட கட்டாய இந்தியை எதிர்த்து, போராட்டங்களை நடத்தி வந்த தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு, 1938 டிசம்பர் 6-ஆம் தேதி சிறையில் அடைக்கப்பட்டார். 1938-ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31-ஆம் தேதிகளில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில், பெரியார் எழுதி அனுப்பிய தலைமையுரையை சர் ஏ.டி.பன்னீர்செல்வம் வாசித்தார். 1939-ஆம் ஆண்டு மே 22-ஆம் தேதி பெரியார் விடுதலையானார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.